**வென்னப்புவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வென்னப்புவ பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நானாவித வைப்புக்கள் மற்றும ஊழியர் கடன் போன்ற கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 63,026,720 தொகையான பட்டோலையின் படி அக் கூட்டுத்தொகை ரூபா 34,163,741 தொகையானமையால் ரூபா 28,862,979 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று கண்டறியப்பட்டது.

#### 1.3.2 தொங்கல் கணக்கு

சபையால் இலங்கை வங்கி வென்னப்புவ கிளையில் பேணப்பட்டு வந்த 0001865986 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்குரித்தாக 2013 திசெம்பர் மாதம் வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் ரூபா 384,122 தொகையான தொங்கல் மீதி தீர்க்கப்படுவதற்கோ அல்லது இது தொடர்பான தெளிவாக்கங்களோ சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 188,259,239 தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,359,024 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 42,600,136 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 9,250 | 7,988 | 5,729 |
| (ii) | வாடகை | 29,515 | 29,336 | 2,251 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,004 | 4,044 | 8,410 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,940 | 11,935 | 1,753 |

#### 2.2.2 வீதவரி

மீளாய்வாண்டிற்காக வீதவரி அறவீட்டின் முன்னேற்றம் 86 சதவீதமாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் நிலுவையான வீத வரியின் அளவு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்திருந்தது. தங்கொட்டுவ மற்றும் கம்மல்பத்துவ உப அலுவலகங்களில் வீதவரி பட்டியலிடப்படுவது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 270,543 குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

#### 2.2.3 ஆதன வரி

(அ) மீளாய்வாண்டின் சபையிடமிருந்த ஆதன வரி வழங்கப்படுகையில் விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிராத ஆதனம் ஆகக் குறைந்த விலைகோரலில் 25 சதவீதம் குறைக்கப்பட்டு மீள வரி வழங்கப்படுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஆதன வரி வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால்

சபைக்குக் கிடைக்கத் தவறிய வருமானம் ரூபா 1,694,265 ஆகக் காணப்பட்டது. '

(ஆ) வென்னப்புவ வியாபாரக் கட்டிடத்தொகுதியின் 4440 சதுர அடியிலான மேல் மாடி 2 ஆண்டு காலமாக வரி செலுத்தப்படாது வியாபாரக் கம்பனிக்காக வழங்கப்பட்டதன் மூலம் சபை நிதியத்திற்குக் கிடைக்கக்கூடிய வருமானம் தவறியிருந்தது.

**2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பிரதம செயலாளரிடமிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 6,491,943 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 153,906,250 |

**2.3 மிகைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது நடாத்தப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 326,335 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இவ்வாறே எதிர்காலத்திலும் ரூபா 340,423 தொடர்பாக மிகைக்கட்டண நடவடிக்கை எடுக்கப்பட இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

(அ) வடமேல் மாகாணத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 28 – 2537 ஆம் இலக்க ஹீனோ வண்டியின் பெறுமதி மதிப்பிடப்பட்டிராததுடன் அது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாத உடைந்த நிலையில் 1997 ஆம் ஆண்டு முதல் வென்னப்புவ நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல ஆண்டுகளுக்கு முன்னர் பழுதுபார்ப்பதற்காக தனியார் நிறுவகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 2,490,000 பெறுமதியான JCB இயந்திரத்தைப் மீளக் கொண்டுவரப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குப்பை அகற்றல் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் சபையின் சுகாதார ஊழியர்களின் எண்ணிக்கையை விலக்கவோ அல்லது குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 2012 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக கனிஷ்ட பதவியணிக்கு 136 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். குப்பை அகற்றல் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமையால் அவர்கள் விளைவற்றோ அல்லது குறைவான பயன்பாட்டுடனோ இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நேரடியான ஊழிய அடிப்படையில் குப்பை அகற்றப்படுவதற்கு சபை கவனம் எடுத்திருக்கவில்லை. மேலும் ஒப்பந்தக்காரர் உடன்பட்டிருந்த உடன்படிக்கைக்கு முரணாக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தமையால் சபைக்கு ரூபா 1,134,586 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நேரடி நிர்மாணிப்பின் கீழ் குரன்வத்த புதிய ஜனபத மத்திய வீதி மற்றும் பொரல்லஸ்ஸ நீதகார காலவத்த வீதி கொங்கிரீட் இடப்படுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கு மாகாண விலைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 26,820 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட 06 கைத்தொழில்கள் தாமதமாக மேற்கொள்ளப்பட்டமைக்காக அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 42,856 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளி ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஹால் தடுவன கினிகல்பல வீதி தாரிடப்படும் செயற்பாட்டில் குறித்த தூரம் மற்றும் அகலம் குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபைக்கு ரூபா 17,930 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 2.7 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 42,300 பெறுமதியான மதிப்பிழந்த காசோலைகள் இரண்டிற்குரித்தான பணத்தை அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) காணி கூறாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் பொது வசதிகளுக்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த காணி கூறாக்கல் மெய்மையாய்வு சபையின் மூலம் மெய்மையாய்வு செய்யப்பட்டு உரிமை மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(எ) ஊழியர் கடன்